# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2154/7 - 2019 දෙසැම්බර් මස 17 වැනි අඟහරුවාදා - 2019.12.17**

2154/7 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது மேற்கோள் இல.: Sri J' Pura/LA/77/UDA.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச செயலகப் பிரிவின் இல. 514C, ஒபேசேக்கரபுர கிராம அலுவலர் பிரிவில், வெலிக்கடை கிராமத்தில் அமைந்துள்ளதும், பொது நிலஅளவை நாயகத்தால் 2019.10.03 ஆந் திகதியில் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. 9840 இன் காணித்துண்டுகள் இல. 1, 2, 3 மற்றும் 4 இன் 0.5635 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணிப் பகுதியின் விபரங்கள் :

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: ராஜகிரிய கும்புற, ஒபேசேக்கர புரவத்த, அருணோதய மாவத்தை மற்றும் ஏனையோர்கள் மதிப்பீட்டு இல. 148/B; விபரம்: வீட்டுத் தோட்டம், இரண்டு மாடிகள் கொண்ட நிரந்தரக் கட்டிடம், இரண்டு நிரந்தரக் கட்டிடங்கள், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி, தற்காலிகக் கட்டிடம் மற்றும் தற்காலிகக் கட்டிடத்தின் பகுதி; ஆரம்ப உரிமை கோருவோர்: காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.0083 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர்: குறிப்பிடப்படவில்லை; விபரம்: சீமெந்துக் கால்வாய்; ஆரம்ப உரிமை கோருவோர்: காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.0009 ஹெக்டயார்.




*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. **துண்டு இல. 03**

காணியின் பெயர்: ராஜகிரிய கும்புற, ஒபேசேக்கர புரவத்த, அருணோதய மாவத்தை மற்றும் ஏனையோர்கள் மதிப்பீட்டு இல. B/151/1; விபரம்: வீட்டுத் தோட்டம், இரண்டு மாடிகள் கொண்ட நிரந்தரக் கட்டிடம், 12 நிரந்தரக் கட்டிடங்கள், 20 தற்காலிகக் கட்டிடங்கள், 2 நிரந்தரக் கட்டிடங்களின் ஒரு பகுதி மற்றும் இரண்டு தற்காலிகக் கட்டிடம்; ஆரம்ப உரிமை கோருவோர்: காணிச் சீர்த்திருத்த ஆணைக் குழு; விஸ்தீரணம்: 0.1363 ஹெக்டயார்.

4. **துண்டு இல. 04**

காணியின் பெயர்: ராஜகிரிய கும்புற, ஒபேசேக்கர புரவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம் மற்றும் விளையாட்டுத் திடலின் இரண்டு நிரந்தரக் கட்டிடங்கள்; ஆரம்ப உரிமை கோருவோர்: காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.4180 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. பீ. சந்தன அனுருத்த பியதாஸ,
பிரதேச செயலாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே .

பிரதேச செயலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை,
2019, திசெம்பர் 12.

1 - 111

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.